---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

இலங்கை பொறியியற் பேரவையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
பேரவையின் நிதிக்கூற்றுக்கள் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அலுவலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவைச் சட்டத்தின் | | | | |
| | (i) | 14(1) மற்றும் 14(2) பிரிவுகள் | 2025 ஆம் ஆண்டில் இலங்கை பொறியியலாளர் நிறுவனம் (IESL) மற்றும் இலங்கை நியதிச்சட்ட பொறியியலாளர் நிறுவனம் (IIESL) ஆகிய இரு நிறுவனங்களிலும் பதிவாகியுள்ள பொறியியல் தொழிலில் ஈடுபடும் 31,360 பொறியியல் வல்லுநர்களில் | IESL நிறுவனத்தின் 76 சதவீதம் பேர் பேரவையில் பதிவாகியுள்ளனர். ஏனைய உறுப்பினர்கள் வெளிநாடு செல்லல், ஓய்வுபெறல், பொறியியலாளராகத் தொழிலில் ஈடுபடாதிருத்தல் போன்ற | இலங்கை பொறியியலாளர் (IESL) மற்றும் இலங்கை நியதிச்சட்ட பொறியியலாளர் (IIESL) ஆகிய இரு நிறுவனங்களிலும் பதிவாகியுள்ள அனைத்து உறுப்பினர்களும் பேரவையில் பதிவு செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 18,631 பேர், அதாவது 59 சதவீதம் மட்டுமே பொறியியற் பேரவையில் பதிவு செய்திருந்தனர். | காரணங்களால் பதிவாகாமல் இருக்கலாம்.<br><br>IIESL நிறுவனத்தின் 27 சதவீதம் பேர் பேரவையில் பதிவாகியுள்ளனர். இது குறித்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | முன்வருவதற்குச் சட்ட ஏற்பாடுகளுக்கமையத் தேவையான பயனுள்ள வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ii) | V ஆம் பகுதியின் 21 ஆம் பிரிவு | பேரவையினால் அமைச்சருடன் கலந்தாலோசித்து பேரவையின் பதவியணியில் பிரதான நிறைவேற்று அதிகாரி ஒருவர் 2026 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்வாகம் மற்றும் ஊழியர் கட்டுப்பாடு உட்பட பேரவையின் நடவடிக்கைகளை நிர்வாகித்தல், பேரவையின் அனைத்துத் தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாயிருத்தல் மற்றும் பேரவையினால் ஒப்படைக்கப்படக்கூடிய அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுதல் ஆகிய பணிகள் பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் சட்டத்தின்படி ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய நிறுவனத்தில் சரியான வேலைப் பகிர்வுடன் கூடிய உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை ஏற்படும் வகையில் நிதி அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது பேரவையின் நிர்வாகம் மற்றும் ஊழியர் கட்டுப்பாடு உள்ளிட்ட பேரவையின் வேலைத்திட்டங்கள் மற்றும் நிர்வாகம், பேரவையின் அனைத்துத் தீர்மானங்களையும் நிறைவேற்றுதல் பொறுப்புள்ள முறையில் மிகத் திறமையாக நடைபெற்று வருகின்றது. மேலும் தற்போது நிறுவனத்தினை நடாத்திச் செல்வதற்கு பொருத்தமான முறையில் சரியான வேலைப் பகிர்வுடன் கூடிய உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை ஏற்படும் வகையில் நிதி அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | பேரவையின் சட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் அமைப்பிற்கு ஏற்ப பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்குப் பொருத்தமான அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் நிறுவனத்தில் சரியான வேலைப் பகிர்வுடன் கூடிய உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை ஏற்படும் வகையில் நிதி அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) பிரிவுகள் | பிரதான கணக்கீட்டு அதிகாரியினால் ஒவ்வொரு நிறுவனத்தினதும் நிதிக்கட்டுப்பாட்டிற்காக பயனுறுதியுள்ள உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை தயார் செய்யப்பட்டுப் பேணப்பட்டு வருகின்றது எனச் சான்றளிக்கப்பட வேண்டும் என்பதுடன், அம்முறைமையின் பயனுறுதித்தன்மை குறித்து அவ்வப்போது எழுத்துமூலம் மீளாய்வு செய்து அதற்கமைய முறைமைகளைப் பயனுள்ளவாறு நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து அதன் படிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்க வேண்டும் என்ற போதிலும் பேரவை அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பிரதான கணக்கீட்டு அதிகாரியுடன் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டதுடன் அக்கலந்துரையாடல் குறிப்பு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) பிரிவுகளுக்கமைய பயனுள்ள உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை உருவாக்கி காலத்திற்குக்காலம் மீளாய்வு செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10:1 உப பிரிவு மற்றும் அதற்குரிய திருத்தங்கள். | அமைச்சின் செயலாளரின் முன் அனுமதியைப் பெறாமலும் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் வருகையை உறுதிப்படுத்தாமலும் 2025 சனவரி முதல் திசெம்பர் வரையான 96 வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களில் கடமைகளை நிறைவேற்றியதற்காகத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பெண் அதிகாரிக்கு மாதாந்த சம்பளத்தில் 1/20 வீதம் மொத்தம் ரூபா 428,156 விடுமுறை நாள் சம்பளமாகவும் ரூபா 77,068 அதன் மீதான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பாகவும் செலுத்தப்பட்டிருந்தது. | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2013 மற்றும் 2013.10.07 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை சட்டப்பூர்வ நிறுவனங்களுக்குப் பொருந்தாது. | பேரவைக்கு நிர்வாகக் கைநூல் ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாததால் விடுமுறை நாட்களில் பணியாற்றுவது மற்றும் விடுமுறை நாள் சம்பளம் வழங்குவது தொடர்பாக தாபனக் கோவையின் விதிகளுக்கமையச் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அனைத்து பொது நிறுவனங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் கருதாது கைவிரல் அடையாள வருடு பொறிகளைப் பயன்படுத்தி அதிகாரிகள் அலுவலகத்திற்கு வருகை தருவதையும் வெளியேறுவதையும் உறுதிப்படுத்தும் பதிவுகளைப் பேண வேண்டும். மேலும் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்திக்கமைய மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் போன்ற சாதாரண கடமை நேரத்திற்கு வெளியில் செய்யப்பட்ட கடமைகளுக்காக வழங்கப்படும் படிகளுக்கு வருகை மற்றும் வெளியேற்ற நேரங்களை அடிப்படையாகப் பயன்படுத்துவதாயின், கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் வருகையையும் வெளியேற்றத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற போதிலும் அவ்வாறு செய்யாது கையொப்பப் பதிவேட்டை மட்டும் பேணி விடுமுறை நாள் சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு சேமிக்கப்பட்ட விடுமுறைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | எமது நிறுவனத்தில் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள் உள்ளதால் கைவிரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்துவது நடைமுறையில் சாத்தியமற்றது. | சுற்றறிக்கைகளுக்கமைய ஊழியர் எண்ணிக்கையைக் கருதாது கைவிரல் அடையாள வருடு பொறிகளைப் பயன்படுத்தி அதிகாரிகள் அலுவலகத்திற்கு வருகை தருவதையும் வெளியேறுவதையும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (உ) | 2025 மார்ச் 25 ஆம் திகதிய 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 13:3 ஆம் பிரிவு | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பெண் அதிகாரிக்குரிய விடுமுறை நாள் சம்பளத்தைக் கணக்கிடுவதற்காக அச்சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைச் சம்பளத்தில் 1/20 பங்கைக் கணக்கிட்டு அவ்வெண்ணிக்கையில் 2/3 பங்கு செலுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் | 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 13:3 பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடுமுறை நாள் சம்பளத்தின் முழுமையான பெறுமதிக் கொடுப்பனவு அரசாங்கத்தின் நிதி நிலைமை சீரடைந்தவுடன் | சபை நிதி மற்றும் நிர்வாகக் கைநூல்களைத் தயாரித்து அங்கீகாரம் பெறவில்லை என்பதுடன் விடுமுறை நாள் படிகள் 1/20 செலுத்துவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்காததால் இச்சுற்றறிக்கைக்கு அமைவாக விடுமுறை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அச்சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைச் சம்பளத்தில் 1/20 பங்கினைச் செலுத்தியமையால் ரூபா 119,798 ஆன மேலதிகக் கொடுப்பனவு அப்பெண் அதிகாரிக்குச் செய்யப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படும்.<br><br>13:4 ஆம் பிரிவிற்கமைய எஞ்சிய 1/3 பங்கு அரசாங்கத்தின் நிதி நிலைமை சீரடைந்தவுடன் செலுத்தப்பட வேண்டும். நாம் திறைசேரியிலிருந்து பணத்தைப் பெறுவதில்லை. எமது நிதி நிலைமை சீராக உள்ளதால் இந்த 1/3 பங்கினைச் செலுத்தினோம். இது தொடர்பாக எம்மிடம் ஒரு அதிகாரி மட்டுமே உள்ளதால் இதற்காகச் செலவாகும் தொகையை எம்மால் தாங்கிக் கொள்ள முடியும். | நாள் படிகளைக் கணக்கிட்டுச் செலுத்த வேண்டும் என்பதுடன் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெற வேண்டும். |
| (ஈ) | 2023 செப்டம்பர் 27 ஆம் திகதிய PED 01/2021(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஒவ்வொரு நிறுவனமும் அந்நிறுவனத்திற்குரிய விசேட நிர்வாக மற்றும் நிதி வழிகாட்டுதல்கள் மற்றும் கைநூல்களைத் தயாரித்து பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்ற போதிலும் பேரவையால் அக்கையேடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | - | சுற்றறிக்கை அறிவுறுத்தலின்படி பேரவைகள் விசேட நிர்வாக மற்றும் நிதி கைநூல்களைத் தயாரித்து அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,938,515 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,234,065 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,704,450 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செயற்பாட்டு வருமானம் அதாவது உறுப்பினர்களைப் பதிவு செய்யும் வருமானம் ரூபா 2,328,157 ஆல் அதிகரித்தமையே பிரதான காரணமாகும்.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 2,328,157 இனால், அதாவது 11.03 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், ஒப்பந்த சேவைகள் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் முறையே 10.55% சதவீதத்தாலும் 10.13% சதவீதத்தாலும் குறைந்திருந்தன.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

பேரவையின் நடைமுறை விகிதம் மீளாய்வாண்டில் 14:1 மற்றும் கடந்த வருடத்தில் 13:1 ஆக இருந்ததுடன் நிகர இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 5.28 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு வருமானம் உயர்வடைந்தமை நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 யூலை 09 ஆம் திகதி முதல் பேரவையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அதிகாரி பதவிக்காக கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் JM 1-1 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு பின்னர் இடைநிலை முகாமைத்துவ மட்டத்தின் MM 1-1 சம்பளக் குறியீட்டிற்கு 2021 ஒக்தோபர் 15 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார்.<br>அதனைத் தொடர்ந்து HM 1-3 சம்பளக் குறியீட்டின் கீழ் பிரதான தகவல் தொழிநுட்ப அதிகாரி பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2022 யூன் 27 ஆம் திகதி முதல் அப்பெண் அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார்.<br><br>முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1850 ஆம் இலக்க மற்றும் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் HM 1-3 சம்பளக் குறியீட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் பிரதான தகவல் தொழிநுட்ப அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்பு MM 1-1 சம்பளக் | MM 1-1 சம்பளக் குறியீட்டில் இருந்த பிரதான தகவல் தொழிநுட்ப அதிகாரி பதவியை HM 1-3 சம்பளக் குறியீடு வரை அதிகரிப்பதற்குச் சம்பள ஆணைக்குழு பரிந்துரைத்ததுடன் அதற்கமைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அது மேற்கொள்ளப்பட்டு அது குறித்து எமக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது.<br><br>பிரதான தகவல் தொழிநுட்ப அதிகாரி பதவி HM 1-3 சம்பளக் குறியீட்டிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் தற்போது அதில் பணியாற்றுபவர் MM 1-1 சம்பளக் குறியீட்டிற்குரிய பெண் அதிகாரியாவார். அப்பெண் அதிகாரி HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குத் தேவையான அனைத்துக் கல்வித் தகுதிகளையும் இதற்கு மேலதிகமாக தொழில்முறைத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்த போதிலும் தேவையான 15 வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்யாததால் அப்பெண் அதிகாரியை உள்வாங்கிக் கொள்ளவும் முடியாது. எவ்வாறாயினும், அப்பெண் அதிகாரியினால் HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குரிய | MM 1-1 சம்பளக் குறியீட்டின் கீழ் வகிப்பவருக்குத் தனிப்பட்டதாக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடமாகும் போது மட்டுமே HM 1-3 சம்பளக் குறியீட்டின் கீழான பதவிக்கு ஆட்களைச் சேர்க்க முடியும் என்பதால் ஒரே நேரத்தில் இரு பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளக் கூடாது. மேலும் கடமை நிறைவேற்றலுக்கு நியமிப்பதற்கு உரிய பதவி வெற்றிடமாக இருக்க வேண்டும். எனவே சேவை அனுபவம் பூர்த்தியடைந்த பின்னர் அப்பெண் அதிகாரியை அங்கீகரிக்கப்பட்ட பிரதான தகவல் தொழிநுட்ப அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய வேண்டுமாயின் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமையச் செயற்பட வேண்டும். மேலும் முறையற்ற வகையில் செலுத்தப்பட்ட படிகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |

குறியீட்டின் கீழ் வகிப்பவருக்குத் தனிப்பட்டதாக அங்கீகரிக்கப்பட்டிருந்த தகவல் தொழிநுட்ப அதிகாரி பதவி வெற்றிடமான பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும்

என்பதுடன் ஒரே நேரத்தில் இரு பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படலாகாது. மேலும் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.5 உப பிரிவிற்கமைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிப்பது வெற்றிடப் பதவிகளை உடனடியாக நிரப்ப வேண்டுமெனின் மட்டுமே என்ற போதிலும் அதற்கமைய HM 1-3 குறியீட்டின் கீழான பதவிக்கு வெற்றிடம் இருக்கவில்லை என்பதுடன் ஒரே கடமை என்பதால் ஒரே நேரத்தில் இரு பதவிகளையும் செயற்படுத்த முடியாது என மேலும் அவதானிக்கப்பட்டது. இருப்பினும் உரிய பெண் அதிகாரிக்கு அதற்காகக் கடமைகளை நிறைவேற்ற நியமித்து அதற்காக மீளாய்வாண்டில் கடமை நிறைவேற்று படிகள், ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பாக முறையே ரூபா 365,520, ரூபா 54,828 மற்றும் ரூபா 10,966 ஆக மொத்தம் ரூபா 431,314 செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக தாபனக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 பிரிவிற்கமைய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் HM 1-3 தரத்திற்குரிய வாகனப் படியாக ரூபா 600,000 உம் எரிபொருள் படியாக ரூபா 414,920 உம் 2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குத் தேவையான சேவை அனுபவமான 15 ஆண்டுகள் பூர்த்தியாகும் வரை கடமைகளை நிறைவேற்றுவதைத்

பேரவையின் பணிகள் மிகத் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2022 செப்டம்பர் 6 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தற்போது பணியாற்றும் பிரதான தகவல் தொழிநுட்ப பெண் அதிகாரி அவர் இருக்கும் MM 1-1 சம்பளக் குறியீட்டில் இருந்து கொண்டு HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குரிய “பதில் கடமையைச்” செய்ய முடியுமென கூறப்பட்டிருந்தது. மேலும் அதற்குரிய தீர்மானத்தைச் பேரவையால் எடுக்க முடியும் என்பதாகும். இலங்கை பொறியியல் பேரவை சட்டத்தின் 22 ஆம் பிரிவின் படி ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தற்போது சேவையிலிருக்கும் பிரதான தகவல் தொழிநுட்ப பெண் அதிகாரி தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13:5 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குரிய பதில் கடமையை “கடமை நிறைவேற்றலாக நியமிப்பதற்குச் சபையினால் தீர்மானிக்கப்பட்டது”. நிறுவனம் தகவல் தொழிநுட்பத்தில் பெரிதும் தங்கியுள்ளதுடன் அதன் நிலையான இருப்பினைக் கருத்திற்கொண்டு அப்பதவியில் பணியாற்றும் அதிகாரி HM 1-3 சம்பளக் குறியீட்டிற்குத் தேவையான சேவை அனுபவமான 15 ஆண்டுகள் பூர்த்தியாகும் வரை கடமை நிறைவேற்றலைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்லச் சபை தீர்மானித்தது. இது சட்டப்பூர்வமாகச் செய்யப்பட்ட நியமனமாகும்.

| | | |
|---|---|---|
| | தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதற்கு பேரவையால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட 09 பதவிகளில் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவி உட்பட 05 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. | தற்போது பேரவையின் நிர்வாகம் மற்றும் ஊழியர் கட்டுப்பாடு உள்ளிட்ட பேரவையின் வேலைத்திட்டங்கள் மற்றும் நிர்வாகம், சபையின் அனைத்துத் தீர்மானங்களையும் நிறைவேற்றுதல் பொறுப்புள்ள முறையில் மிகத் திறமையாக நடைபெற்று வருகின்றது. | பணிகளுக்கு ஏற்ப பதவிகளின் எண்ணிக்கையைத் திருத்தியமைக்க அல்லது அத்தியாவசிய பதவிகளுக்கு ஆட்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை அரசுக்குச் சொந்தமான பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்திக்கு முரணாக 2024 ஆம் ஆண்டிற்கான பேரவையின் ஆண்டறிக்கை 2026 ஏப்ரல் மாதம் வரையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்கான பேரவையின் ஆண்டறிக்கை 2025 யூலை 31 ஆம் திகதி நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. | சுற்றறிக்கைகளுக்கமைய நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால் எதிர்காலத்தில் அந் நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். . |